★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 கார்த்திகை 15 துல்ஹஜ் 29 இதழ்: 291
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-12-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள்,
குறிப்புகள் முதலியன
CYCLO-STYLE செய்யவும்
போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

## சரித்திர 'சாதனை'

(கொழும்பு)
1948 ஆண்டுக்குப் பின் இலங்கைச் சரித்திரத்தில் முதல் தடவையாக அமைச்சு ஒன்றிற்கான நிதி ஒதுக்கீடு எவ்வித விவாதமும் இன்றி நிறைவேறியுள்ளது.
வெளிநாட்டு அமைச்சின் நிதி ஒதுக்கீடே நேற்று பாராளுமன்றத்தில் கண்டனம் எதுவுமின்றி நிறைவேறியது. ...

★ இயற்கையின் கோரப்பிடியில் சிக்கி சின்னாபின்னமான பகுதிகளில்

# புதிய நகரங்கள் நிர்மாணம்!

# வெளிநாட்டு உதவி குவிகிறது!

## போக்குவரத்தும் சீரானது

(மட்டக்களப்பு)

சூறாவளி, வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில், புதிய நகரங்களை நிர்மாணிப்பது குறித்து அரசாங்கம் ஆலோசனை மேற்கொண்டுள்ளது.

நேற்று, இலங்கைவந்துள்ள அமெரிக்க இராணுவ ... நிபுணர்கள் பந்தமாக இலங்கை, அமெரிக்க அரசாங்கங்களுக்கு ... முறையில் ஆலோசனை வழங்குவார்கள்,

மட்டக்களப்பில் நிவாரணப் பணிகள் கடுகதி வேகத்தில் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் பல வெளிநாட்டு அரசாங்கங்களும், பொது ஸ்தாபனங்களும், கூடுதல் உதவிகளை அளித்து வருகின்றன.

**ஐ. நா. செயலாளர் அனுதாபம்**

ஐக்கிய நாடுகள் பிரதம செயலாளர் திரு. வால்ட்ஹெய்ம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றில், இலங்கையின் சில பகுதிகளில் ஏற்பட்ட இயற்கை அழிவுகள் குறித்து தாம் மிகுந்த கவலை கொண்டிருப்பதாகவும், முடியுமான சகல உதவிகளையும் வழங்க ஐ நா ஸ்தாபனம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சூறாவளி சேதம் பற்றி இதே ... அனுதாபச் செய்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் சூறாவளி?

### அவதான நிலையம் மறுப்பு!

(கொழும்பு)

இலங்கையை மீண்டும் ஒரு சூறாவளி தாக்கும் அபாயம் காத்திருக்கிறது என்று வெளிவந்த செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை என்று வளிமண்டல அவதான நிலைய அதிபர் தெரிவித்துள்ளார் (ம)

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

நேற்று மாலை கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் குலுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 69 வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
33 J 0282
ரூபா 1 00 000
இரண்டாம் பரிசு
18 R 0398
ரூபா 40,000
மூன்றாம் பரிசு
34 M 0786
ரூபா 10,000

100 ஆறுதல் பரிசுகள் தலா ரூபா 196-75 சதம் கொண்டவை நாளை வெளிவரும்.

## மட்டக்களப்பின் உடனடித் தேவை

(நமது நிருபர்)

இயற்கையின் கொடூரத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களுக்கு, அரிசி, ... வர்த்தி, பாய், ... கள், கிடுகுகள் போன்றவைகளே இப்பொழுது உடனடியாகத் தேவைப்படுகின்றன

இவற்றை வடபகுதித் தமிழ் மக்கள் தாராளமாகக் கொடுத்து உதவவேண்டும் என்று மட்டக்களப்பு இளைஞர் பேரவைத் தலைமைப் ...

(6-ம் பக்கம் பார்க்க)

★ கடைசிசெய்தி

... நேற்று முதல் போக்குவரத்து வழமையான நிலைக்குத் திரும்பியது. மட்டக்களப்புக்கு நேற்று முதலாவது இரவுத் தபால் ரயில் கொழும்பிலிருந்து புறப்பட்டது. நாட்டின் சகல நெடுஞ்சாலைகளிலும் போக்குவரத்து சீரானதாக இ. போ. ச. அறிவித்துள்ளது,

## எட்டு லட்சம் மக்கள் பாதிப்பு

### பாராளுமன்றத்தில் பிரதமர்

[கொழும்பு]

அண்மையில் ஏற்பட்ட பயங்கர சூறாவளியல் சுமார் இரண்டரை லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த எட்டு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென்று பிரதமர் ...

[6-ம் பக்கம் பார்க்க]

★ லஞ்சஊழல், நிதி மோசடி குற்றச்சாட்டு:

# 2 முன்னாள் (தி.மு.க.) மேயர் உட்பட 73 பேருக்கு கடுழியச்சிறை!

[சென்னை]

லஞ்ச ஊழல், நிதிமோசடி குற்றச்சாட்டுகளின் மீது, சென்னை மாநகரசபையின் [முனிசிபல் கார்ப்பரேஷன்] இரண்டு முன்னாள் மேயர்கள், (தி மு கழகத்தைச் சேர்ந்தவர்கள்) நேற்று குற்றவாளிகளாகக் காணப்பட்டு ஒரு வருட ... சிறைத் தண்டனை ... விதிக்கப்பட்டனர்.

இவர்களுடன் ... தொரு பேருக்கு ... முதல் நான்கு வ... சிறைத் தண்டனை ... பட்டது.

சென்னை ... லத்தில் நடந்தது.

குற்றம் சுமத்தப்பட்ட 106 பேரில் 32 பேர் விசாரணை நடுவில் விடுதலை செய்யப்பட்டனர். விசாரணைக் காலத்திலேயே ஒரு முன்னாள் மேயர் [திரு முனுசாமி] உட்பட மூவர் மரணமானார்கள். இதனைத் தொடர்ந்து இருபது மாதங்களாக ... நடை... முன்னாள் மேயர் ... மைனர் மோசஸ், ... பகம் உட்பட 73 பேருக்கு ஒரு வருடம் முதல் நான்கு வருடங்கள் வரையிலான கடுழியச் சிறைத் தண்டனை நேற்று விதிக்கப்பட்டது

## வரி விளம்பரம்

### பயிற்சி

3 மாத டிப்பிளோமா மோட்டார் மெக்கானிக் பயிற்சி. 05-01-1979 ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு; அதிபர். இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B, மொடசாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0915

### தேவை

விலங்கு உயிரியல் ஆக்கியோன் 'கிரூப் அன்றுவல' 15, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் 092[illegible]

வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்குத் தேவை. ஆனைக்கோட்டை, [illegible] பாய், மருதனார்மடப் பகுதி இடங்கள் விரும்பத்தக்கது தொடர்பு [illegible] கர் வி. கே. ஜெயரெட்ணம் திறையான புதுவாழ்வு நிலையம், தேவாலய ஒழுங்கை கூளாவடி, ஆனைக்கோட்டை. 0936

### விற்பனைக்கு

ஈ. வை. மொறிஸ் மைனர் இரண்டாவது உரிமையாளர் மிகச் சிறந்த நிலை. விலை ரூபா 21,000/-. தொடர்பு கொள்ளவும். 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 0926

22 ஸ்ரீ 5247 இலக்க மேர்ஸி பேர்குஸன் 35 டிராக்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; சி. யாதவகுமார், [illegible], கொக்குவில். 0935

30 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. எழுதுமட்டுவாழ் கிளாலி றோட்டில், விபரங்களுக்கு 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0916

### கேள்வி விளம்பரம்

எமது புதிய 05 (ஐந்து) தொன் இசுசுஸ் லொறிக்கு பொடி அடிப்பதற்கான கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன இவை அனுப்பவேண்டிய முடிவுதிகதி 15-12-78 விண்ணப்பிப்போர் ரூபா 5-00 செலுத்தி சங்கத்தில் பெறப்படும் படிவங்களில் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும் விண்ணப்பங்கள் யாவும் இடது மேல்மூலையில் 'லொறி பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பம்' என்று குறித்து அனுப்பப்படல்வேண்டும்.

பொது முகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப. நோ.
கூ. சங்கம்.
கிளிநொச்சி

27-11-78 0932

### ஏல விற்பனை

**துணுக்காய்ப் பகுதி**
**பல நோ. கூ. சங்கம்**

2-12-78 காலை 9-00 மணிக்கு துணுக்காய்ப் பகுதிப் பல நோ. கூ. சங்கத்தில் ஏலவிற்பனை நடைபெறும். ஐவுளி வகைகள், சேட், சூட்டிங் வகைகள், கால்நடைத்தீன் தயாரிப்புக்குத் தேவையான கோதுமைமா, கடலை, வேறு பல நுகர்ச்சிப் பொருட்கள் போன்ற மற்றும் கழிவுப் பொருட்களும் இடம் பெறும். பொருள் பெறுவோர் உடன் பணத்தைக்கட்டிப் பொருட்களைப் பொறுப்பேற்றல் வேண்டும்.

தலைவர்
து. ப. ப. நோ. கூ.
0931 சங்கம்.

### உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் விளம்பரம்

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 6-12-78க்கு முன்னர் ரூபா 100/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 12-12-78 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வல்வெட்டித்துறை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை. 0933

### யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

### கேள்வி அறிவித்தல் விண்ணப்பம்

எமது மின்தறி நிலையத்திற்கு தேவையான பிம தயாரிப்பதற்கு கேள்வி மூலம் விண்ணப்பம் கோரப்படுகிறது. அத்துடன் நல்ல நிலையிலுள்ளதும், பழுதடைந்ததுமான வெற்றுப் பரல்களும் கழிவு கடதாசிகளும் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

விண்ணப்ப முடிவுத் திகதி 7-12-1978.

மேலதிக விபரங்களை சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதில்பொதுமுகாமையாளர்
74/3, அல்விரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
1978-11-29. 0930

### கைதடி கிராமசபை

### கேள்வி விளம்பரம்

**நூல் நிலைய கட்டிடம் கட்டுதல்**

கைதடி கிராமசபை விசேட ஆணையாளரால் இச்சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கீழ்க்காணும் வேலைக்கு அரக்குமுத்திரை இடப்பட்ட கேள்விகள் 12-12-78ம் திகதி காலை 10-00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்கள் கிராம சபைக் காரியாலயத்திலும், யாழ்ப்பாணம் பிர. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம். கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூ 100/-ம் கேள்விப்பத்திரப்பணம் 50/-ம் கைதடி கிராமசபைக்குச் செலுத்தியதின்பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

**வேலையின் விபரம்**

1. பொது நூல் நிலையக் கட்டிடம் கட்டுதல்.

ஏ. ஜெ. செந்தில்நாதன்
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
கைதடி.

கிராமசபை பணிமனை,
கைதடி,
23-11-78. 09[illegible]

## வேலைவங்கி

# 25000 விண்ணப்பங்கள் கம்பியூட்டருக்கு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசப் பொதுத்துறை உள்ளூராட்சி நிறுவனங்களில் தொழிலற்றோரைத் தொழிலமர்த்தற்கான திட்டத்தில் தொழில்காண் தரவு வங்கி மூலம் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடைமுறைகளடங்கிய சுற்றுநிருபம் அரசாங்க அதிபர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தொழில்காண் தரவு வங்கி இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்படுமென அச்சுற்றுநிருபம் கூறுகின்றது.

க. பொ. த. (சாதாரண) தரத்தினையுடையவரும், அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகளையுடைய விண்ணப்பங்கள் யாவும் மத்திய கம்பியூட்டர் முறை திட்டத்திலும், க. பொ. த. (சாதாரண) தரத்திற்கும் குறைந்த கல்வித்தகைமைகளையுடைய விண்ணப்பங்கள் மாவட்டரீதியிலான திட்டத்திலும் தயார்படுத்தப்படுமென மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தில் விளக்கப்பட்டுள்ளது.

மத்திய கொம்பியூட்டர் திட்டம், திட்டம் செயற்படுத்தும் அமைச்சின் ஆள்வலுத் திட்டப் பகுதியின் தொழில்காண் தரவு வங்கிக் கூற்றினால் செயற்படுத்தப்படுமெனவும், மாவட்டரீதியிலான திட்டத்தின்செயற்பாட்டுடன்தொடர்புடைய வேலைகள் யாவும் அரசாங்க அதிபர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழான கச்சேரிகளிலுள்ள திட்டமிடல் கூறுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மத்திய தொழில்காண் தரவு வங்கியிலும், கச்சேரிகளிலும் விண்ணப்பங்களைத் தயார்படுத்துதல் ஆரம்பமாகியுள்ளனவெனவும் அக்டோபர் மாத இறுதியில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் மத்திய தொழில்காண் தரவு வங்கியில் கிடைக்கப் பட்டுள்ளனவெனவும் இவற்றில் 25,000 விண்ணப்பங்கள் சரிபார்த்த தொகை மதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு கம்பியூட்டர் தெரிவிற்காக கையளிக்கப்பட்டுள்ளனவெனவும் திட்டம் செயற்படுத்தும் அமைச்சினால் அனுப்பப்பட்ட இச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[கே- ]

## 'தமிழ்வளர்த்த கிறிஸ்தவர்' வெளியீடு

[யாழ்ப்பாணம்]

'ஈழநாடு' வாரமலரில் தொடர்ச்சியாக வெளிவந்த 'தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்' என்ற கட்டுரைத் தொடர் நூல் வடிவம் பெறுகிறது.

வடகிழக்கு மாகாண மெதடிஸ்த சபைத் தலைவர் வண. எம். ஏ. இரத்தினராஜ் எழுதிய இக்கட்டுரையை யாழ். கிறிஸ்தவ கலாச்சார சமூக சங்கத்தினர் புத்தக வடிவில் வெளியிடுகின்றனர்.

இப்புத்தக வெளியீட்டு விழா இம்மாதம் 5-ம் திகதி கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் நடைபெறுகிறது

கலாசாலை கிறிஸ்தவ மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் ஒளிவிழாவில் இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

அதிபர் திரு. ஜே. ஜெயராஜா, தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். ஆயர் பேரருட் திரு. கலாநிதி பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்துகொள்கிறார்.

தவத்திரு எஸ். தனிநாயகம் அடிகளார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கிறார். அருட்திரு. சா. ம. செல்வரத்தினம் அடிகளார் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (க)

## சுவிசேஷ கூட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். வை. எம். சி. ஏ. சுவிசேச கூட்டங்கள் கடந்த 23, 24, 25ம்திகதிகளில் யாழ். வை.எம்.சி.ஏ.யில் நடைபெற்றன. இலங்கைஇலவந்தோறும் நற்செய்தி யாழ். வை. எம். சி ஏ ஒருங்கிணைந்து நடாத்திய இக்கூட்டங்களில் திருவாளர்கள் சாம் தேவபாலசிங்கம், ரெக்ஸ் நத்தானியல்ஸ் ஆகியோர் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டனர். [கெ]

## ஒரே இரவில் மூன்று திருட்டுகள்

[நெல்[illegible]

கரணவா[illegible]
அந்த[illegible]
களி[illegible]

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வை. எம். சி. ஏ. களின் 7பேர் கொண்ட உதைபந்தாட்டப்போட்டியில் யாழ் வை. எம். சி. ஏ. இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. [ ]

## சூறுவளி நிவாரணத்துக்கு அமெரிக்க உதவி

[கொழும்பு]

இலங்கையின் பல பாகங்களிலும் கடந்த வாரம் பேரழிவை ஏற்படுத்திய சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை 'யூனிசெப்' நிறுவனத்தின் மூலம் வாங்குவதற்கு அமெரிக்கா 3,75,000 ரூபாவை வழங்கியுள்ளது.

மேலும் 1400 கூடாரங்கள், 10,000 போர்வைகள் என்பவற்றையும் வாள்கள், மண்வெட்டிகள், கோடரிகள் போன்ற பலதரப்பட்ட கைக்கருவிகளையும் அமெரிக்கா உடனடியாகக் கொடுத்து உதவியது.

## விவசாயப்பீட மாணவர் பட்ட அவதி

(மகாஇலுப்பள்ளம்)

சூறாவளி வெள்ளப்பெருக்கினால் மகாஇலுப்பள்ளம் விவசாயபீட மாணவர்கள்பெரும் அவதியுற்றனர்,

விடுதியை பிரதானவீதிக்கு இணைக்கும் பாதைக்குக் குறுக்கே எட்டடி வெள்ளம் பாய்ந்ததனையால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

சூறாவளியினால் பெருமரங்கள் வேரோடு சரிந்தன பயிர் அழிவுகளும் பொருட்சேதமும் பெருமளவு இடம்பெற்றுள்ளன.

பாரிய மரமொன்று வீட்டின் மேல் விழுந்ததால் பெண் ஒருவர் மரத்தின் கீழ் நசுங்கி மரணமானார்.

அரசாங்க கோழிப்பண்ணை மீதும் மரங்கள் வீழ்ந்து கட்டடச் சேதத்தையும், கோழிகளுக்கு அழிவையும் ஏற்படுத்தியுள்ளன.

பல்கலைக்கழக மின் விநியோகங்கள் துண்டிக்கப்பட்டன. நீர் விநியோகம் தடைப்பட்டது.

[ச-இ]

## ஆசிரியர் தேவை

தமிழ் வாசிக்க எழுத தனிப்பட போதிப்பதற்கு தகுந்த ஆசிரியர் தேவை. விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவராய் இருத்தல் வேண்டும். சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். சாரைநகரில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3-12-1978 ஞாயிற்றுக்கிழமை காலை 9—12க்குள் நேரில் வரவும்.

P. A. Anderson,
"Villa Padua",
Pandaterupu.

0941

### யாழ்ப்பாண மாநகர பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## பதவி வெற்றிடம்

### கொள்வனவு உத்தியோகத்தர் தரம் 11

தகைமைகள்: ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண) சித்தியும், கூட்டுறவு வேலையாளர் சாதாரண தராதரப் பத்திரமும், அத்தகைய ஒரு பதவியில் இரண்டு வருட கால அனுபவமும்.

சம்பளம்: 250 — 390 ........................ (பிற விசேட படிகளும்)
8×10, 10×6

வயது: 25 — 45

முடிவுத் திகதி: 12-12-1978

மேற்படி தகைமைகள் உள்ள விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பப்படிவ தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் 'பதவியின் பெயர் குறிப்பிட்டு, காரியதரிசி, 74/3, அல்விரட் துரையப்பா வீதி. யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 12-12-'78-ந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

பதில் பொதுமுகாமையாளர்.

[illegible]/3, அல்விரட் துரையப்பா வீதி,
[illegible]ழ்ப்பாணம்,
[illegible]78-11-29. 0929

ஈழநாடு The Eelanaadu

# "யுத்தத்தை எதிர்நோக்கும் நிலையில் நாம் செயல்பட வேண்டியுள்ளது!"

## பாராளுமன்றத்தில் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தை சமர்ப்பித்து பிரதமர் உரை

(நமது பாராளுமன்ற நிருபர் 'மாலி')



(கொழும்பு)

பாதிப்புற்ற பகுதிகளின் நிவாரண வேலைகளை மிகத் துரிதமாக மேற்கொள்வதற்கு உறுதியாக பொதுசன பாதுகாப்புச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, பிரதமர் திரு. ஆர். பிரேமதாச, எதிர்க் கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோருடன் அமைச்சர்களும் கலந்து கொண்ட மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பிரதமர் திரு ஆர் பிரேமதாச இதனை நேற்றுமுன் தினம் சபையில் அறிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, பொலனறுவை, கொழும்பு துறைமுகப் பிரதேசம், கட்டுநாயக்க விமானநிலையப் பிரதேசம் ஆகிய இடங்களில் பொதுசனப் பாதுகாப்புச்சட்டம் அமுலில் இருக்கும்.

சபையில் இதனை அறிவித்த பிரதமர் மேலும் கூறியதாவது:

யுத்தமொன்றை எதிர்நோக்குவது போன்ற உஷார் நிலையில நாம் செயற்பட வேண்டியிருக்கிறது. பருவப் பெயர்ச்சிமழை ஆரம்பித்துவிடப் போவதால் சாதாரண சட்டங்களின் கீழ் "ரெண்டர்" முறைகள் மூலம் சிதைவடைந்த பகுதிகளின் நிருமாண வேலைகளை பூர்த்திசெய்ய முடியாது. இந்த முறைகளின்கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் மிக நீண்ட காலம் எடுக்கும். அரசாங்கம் மந்திரி சபை மாத்திரமல்ல எதிர்க் கட்சிகளின் தலைவர்களுமே இதனை ஏகமனதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

### பெருமளவில் வெளிநாட்டு உதவி

கொழும்பு துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் வெளிநாட்டு உதவிகள் பெருமளவில் வந்து சேர்ந்தவண்ணமிருக்கின்றன.

இவற்றையெல்லாம் பயன்படுத்தி மகவிரைவில் பொதுசனபாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும். சாதாரண சட்டங்களின்கீழ் செய்வதாலும் மிக நீண்டகாலம் எடுக்கும். அப்போது பலர் உற்சாகமிழந்து மறந்துவிடுவர், அதனால், கட்சித்தலைவர்களும் சேர்ந்து எடுத்த இந்தமுடிவை சபைக்கு நான் தெரிவிக்கின்றேன்.

### 3 மாவட்டக் குழுக்கள்

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நிவாரண வேலைகளைக் கவனிப்பதற்கு பாதப்புற்ற மூன்று மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் அறிவித்தார்.

மட்டக்களப்புக்கு நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், விவசாய ஆராய்ச்சி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்க, பொலனறுவைக்கு காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்க ஆகியோர் இக்குழுக்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்புக்கு மாவட்ட அமைச்சர் திரு. எம். கனகரத்தினம் குழுவின் உபதலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசின் எண்ணத்தோடு மட்டுமன்றி சகலரினதும் ஒத்துழைப்புடனுமே தாம் இந்த நிவாரண வேலைகளை மேற்கொள்ளவிளைவதாக தெரிவித்த பிரதமர், எதிர்க்கட்சி தலைவரும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அளிக்கும் பெரும் ஒத்துழைப்புக்காக அவர்களுக்கு நன்றியும் தெரிவித்தார். [ம]

## க. பொ. த. (சாதாரணதர) பரீட்சை

கல்வி பொதுத்தராதர பத்திர (சாதாரணதர) பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் 12ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

இப்பரீட்சைக்கான ஆயத்தங்கள் யாவும் பூர்த்தியாகும் கட்டத்திலுள்ளன. கடந்த காலங்களில்போலல்லாமல் பரீட்சைநடைபெறவிருக்கும் நிலையங்களில் பலத்த பொலிஸ் பந்தோபஸ்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வளவு ஆயத்தங்களும் செய்யப்பட்டதன் பின்னர் சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட சூறுவளி-வெள்ளக் கொடுமைகளின் காரணமாக பரீட்சைகள் பின்போடப் படலாமென்ற ஒரு அபிப்பிராயம்மாணவர்கள் மத்தியில் பரவத் தொடங்கியது. ஆனால் எந்தக்காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சையைப் பின்போடுவதற்கில்லையென்றும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் கோவில்களிலும், தற்காலிக கொட்டில்களிலும் நிலையங்கள் அமைக்கப்பட்டு பரீட்சைகள் நடத்தப்படுமென்று பிரதி கல்வி யமைச்சர் திரு லயனல் ஜெயத்திலக்க சில தினங்களுக்குமுன் கண்டிப்புடன் கூறியிருந்தார்.

ஆனால் பல லட்சக்கணக்கான மாணவ, மாணவியர் கலந்துகொள்ளும் இந்தப் பரீட்சையைத் திருப்திகரமாக நடத்திமுடிக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாக நாம் கருதவில்லை.

பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய சுமார் 13,000 மாணவர்கள் சூறுவளியின் பாதிப்புக் குள்ளாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது. பரீட்சை நடத்துவதற்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த 100க்கும் மேற்பட்ட நிலையங்கள் உடைந்தும், தகர்ந்தும் போயுள்ளன. மாற்று நிலையங்களாகப் பாவிக்கப் படக்கூடிய கோயில் மண்டபங்கள் போன்றவை அகதிகளின் புகலிடங்களாகப் பாவிக்கப்படுகின்றன.

டிசம்பர் 12-ம் திகதிக்கு முன்னர் இந்த நிலைமை சீராகி விடுமா என்பது முக்கியமானதொரு கேள்வியாகும்.

மட்டக்களப்புப் போன்ற பகுதிகளில் நிலைமை சீராவதற்குப் பல மாதங்கள் பிடிக்கலாம்.

அங்கு பாதைகள், கட்டிடங்கள், யாவும் சீரழிந்துக் கிடப்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதே பெரும் பாடாகவிருக்கின்றது.

பரீட்சைகளுக்குப் பொறுப்பாக இருக்கவேண்டிய அதிகாரிகளும், பாதுகாப்பு அளிக்கவிருக்கும் பொலிசாரும் இப்பகுதிகளில் புனர்நிர்மாண வேலைகளில் முழுமூச்சாக ஈடுபட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் க. பொ. த [சாதாரணதர] பரீட்சையை திருப்திகரமாக நடத்திமுடிப்பது சாத்தியமா என்று கேட்கத் தோன்றுகின்றது.

பொதுவாகப் பார்க்குமிடத்து இப்பரீட்சையை ஒத்திவைத்து சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வசதியானஒரு சமயத்தில் அதை நடத்துவதே பொருத்தமாய் இருக்கும் என்று நாம் கருதுகின்றோம்.

## யாழ். மாவட்டத்தில் பெருவெள்ள அபாயம்

### "பிரார்த்தனையால் தடுத்திடுவோம்"

[யாழ்ப்பாணம்]

டிசம்பர் 17-ம் 18ம் தேதிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருவெள்ள அபாயம் ஏற்படும் என பிரம்மஸ்ரீ சோ. சிவகடாட்ச சர்மா கணித்துள்ளார்.

இப் பெருவெள்ளம் டிசம்பர் 20ம் தேதிவரை நீடிக்கும் என்றும் கணிப்பில் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக பிரசித்த நொத்தாரிஸ் திரு. கா. சி. செ. முத்துக்குமாரு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: "இயற்கையின் கொடூரத்தைத் தடுப்பதற்கு மானிடர்களாகிய எம்மால் எதுவிதத்திலும் முடியாது. தெய்வவழிபாடு ஒன்றின் மூலமே எந்த அபாயத்தையும் தடுக்கமுடியும் என்பதை இதிகாசபுராணங்கள் மூலம் அறியக்கிடக்கின்றது.

"ஆகவே இனமத பாகுபாடின்றி இன்றுமுதல் சகல சைவ, வைஷ்ணவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த ஆலயங்களில் விசேட பூசை பாராயண கூட்டுவழிபாடுகள் நடாத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்

"ஒவ்வொரு தனிமனிதனும் தம்மால் இயன்றளவு இதவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருளாதார உதவி செய்வதன்மூலமும் தினசரி தியானம் செய்வதன்மூலமும் எமக்கு அடுத்து வரும்கும் பெருவெள்ளஅபாயத்தைத் தடுக்கமுடியும்". (க-அ)

## சூருவளி - வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

### சிறிமா உறுதி

(கொழும்பு)

இயற்கையின் கொடுமையால் பாதிப்புற்று, அகதிகளாக அல்லலுறும் மக்களின் நிவாரணப் பணிகளுக்கான சகல நடவடிக்கைகளிலும் எமது பூரண ஒத்துழைப்பை எந்நேரமும நாம் வழங்குவோம் என்று சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிவாரணப் பணிகள் தொடர்பான சகல ஆலோசனைக் கூட்டங்களிலும் தமது கட்சியின் சார்பில் திரு. மைத்திரிபால சேனநாயக்கா கலந்துகொள்வாரென்றும் அகதிகளாக்கப்பட்டுள்ள பல லட்சம் மக்களும் கஷ்டங்களிலிருந்து விரைவில் மீட்கப்பட வேண்டும் என்றும் திருமதி சிறிமாவோ கூறினார். [ம]

## ஒருநாள் சம்பளம்

(நெல்லியடி)

நெடுஞ்சாலைகள் அமைச்சின் நெல்லியடி அலுவலக ஊழியர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை சூறுவளியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முன்வந்துள்ளார்கள் (க)

## பகல் பாசறை

[யாழ்ப்பாணம்]

வருடாவருடம் யாழ் வை. எம். சி. ஏ யினால் நடாத்தப்படும் "பகல் பாசறை" இம் மாதம் 1'ம் திகதியிலிருந்து 16ம் திகதிவரை யாழ் வை. எம். சி. ஏ யினால் நடாத்தப்படவுள்ளது 8 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு உடற்பயிற்சி, நாடகம், பேச்சு, விளையாட்டு, முதலுதவி, நீச்சல், சமையல் ஆகியவற்றில் பயிற்சி கொடுக்கப்படும் இப் பாசறை இவ்வருடம் 13வது வருடமாக நடாத்தப்படவுள்ளது. [கெ]

## குடும்ப இரவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வருடாவருடம் வை. எம். சி ஏ அங்கத்தவர்களுக்கு நடாத்தப்படும் குடும்பஇரவுப் போட்டி யாழ் வை. எம். சி. ஏ யில் அடுத்தமாதம் 19ம் திகதி ஆரம்பமாகும். பட்மின்ரன், கரம், டேபிள் டெனிஸ், சொப், டிராவ்ஸ் ஆகியன இடம்பெறும் இறுதிநாளாகிய 30ம் திகதி குடும்பங்கள், சிநேகிதர் யாவரும் ஒருங்குபட்டு குடும்ப இரவைக் குதூகலமாகக் கொண்டாடுவார்கள். [கெ]

## "சமயக்கல்வி ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்கும்"

### -ரி. மாணிக்கவாசகர்

[சுழிபுரம்]

"சமயக் கல்வியே உண்மையான ஒழுக்கத்தைப் போதிக்க வல்லது என சமயக் கல்வியை ஒழுங்காகக் கற்பித்தால் நாட்டில்ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்கமுடியும்"

இவ்வாறு வடமாநில வித்தியாதிபதி திரு ரி. மாணிக்கவாசகர் இளவாலை மெய்கண்டான் வித்தியலயப் பொன் விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்

வித்தியாலய அதிபர் திரு. எஸ். செல்வத்துரை விழாவுக்குத் தலைமைவகித்தார்.

திரு மாணிக்கவாசகர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

"புதிய கல்வித்திட்டம் சகல பிள்ளைகளுக்கும் கல்வியில் சமவாய்ப்பினை அளிப்பதால் கிராமப்புறங்களிலுள்ள சிறிய பாடசாலைகளும் நகர்ப்புறப் பெரிய பாடசாலைகள் போன்று சிறந்த மாணவர்களை உருவாக்கக்கூடியதாக உள்ளது" என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பொன்விழா நினைவாக மெய்கண்டான் பொன்மலர் என்னும் மலரை வெளியிட்டு வைத்தார் இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளரின் பாரியார் திருமதி ஞா மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினர் காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரம் மங்கள விளக்கேற்றி ஸ்தாபகர் படத்திற்கு மாலை அணிவித்தார் இறுதியில் மாணவரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. [உ]

### மணிவாக்கு

நன்மை செய்வதற்கு சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழி வாயாகில், பின்ஒருகாலத்தில் அது வாய்ப்பதரிது".

—ஆறுமுகநாவலர்

## மத்திய கிழக்கு நிரந்தர அமைதிக்கு
# பாலஸ்தீன பிரச்னைகளை முதலில் தீர்க்க வேண்டும்
## வால்ட்ஹெய்ம் கருத்து

நியுயோர்க், நவ. 30
மத்திய கிழக்கில் நீடிக்த நிலையான சமாதானம் ஏற்படவேண்டுமானால் பாலஸ்தீன மக்களின் விவகாரம் நன்ருக ஆராயப்பட்டு தீர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இந்தவேளையில் எகிப்திய அதிபர் அன்வர் சதாத் அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி சார்ட்டரின் விசேட தூதுவருடன் பேச்சு நடத்தினர்.

இதேசமயம் எகிப்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே மத்திய கிழக்கு அமைதிப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆலோசனை நடத்துவதற்காக எகிப்தியப் பிரதமர் ஜனுப் முஸ்தபா கலீல் வாஷிங்டன் சென்றுள்ளார். [இ]

---

★ 193 ஆண்டு பழமை வாய்ந்த
# லண்டன்டைம்ஸ் மூடப்பட்டது!

லண்டன், நவ. 30
193 ஆண்டுகள் பழமை வாய்ந்த 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டுள்ளது

அண்மைக்காலத்தில் இப்பத்திரிகை விநியோகத்தில் 1கோடியே 30 லட்சம் பிரதிகள் இழப்பு ஏற்பட்டதை அடுத்தே இந்நிறுவனம் மூடப்பட்டுள்ளது.

நேற்று 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை கடைசித் தடவையாக வெளிவந்தது.

தற்காலிகமாகவே இப்பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் அதிபர் திரு. தொம்சன் பிரபு குறிப்பிட்டுள்ளார். [இ]

---

## 'சிறு பிள்ளைகளின் மனவளர்ச்சிக்கு வழி'
[உடுப்பிட்டி]

"இளம் பிராயத்தினருக்குச் சிறு வயதிலிருந்தே கல்வியறிவையும், நல்ல பழகக வழக்கங்களையும் ஊட்டுவதின் மூலமே எதிர்காலத்தில் அவர்களை நற்பிரஜைகளாக உருவாக்க முடியும். இதற்கு பாலர் பாடசாலைகள் சிறந்த சாதனங்களாக விளங்குகின்றன. பாலர் பாடசாலைகள் சிறுபிள்ளைகளின் மனவளர்ச்சியைப் பண்படுத்தி அவர்களை அறிவாளிகளாகத்திகழ்வதற்கு அத்திபாரமிடுகின்றன''.

இவ்வாறு முன்னள் நெல்லிடிப் பட்டினசபைத் தலைவா திரு எஸ். பி. தேவசகாயம் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய மைதானத்தில் நடைபெற்ற கரவெட்டி ஊர்த்து மாதர் கன்னியர் பட பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விளையாட்டு விழா விற்கான ஒழுங்குகளை ... பாடசாலை அதிபர் சங். சகோதரி அல்பிரெ, ஆசிரியைசெல்வி சாந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

விழா முடிவில் பாலர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (உ)

---

## பாஷையூர்க் கிளையை மூடுவதற்கு ஆட்சேபம்
### பாவனையாளர்மறியல்

(யாழ்ப்பாணம்)
பஷையூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க 23 ஏ கிளையை மூடவேண்டாம் எனக்கோரி நூற்றுக் கணக்கான பாவனையாளர்கள் இக்கிளை முன்மறியல் செய்தனர்.

யாழ் மாநகர ப. நோ. கூ. சங்கத்தின் புதிய தலைவரின் கீழ் உள்ள நெறியாளர் குழுவின் தீர்மானப்படி பாஷையூர்ப் நோ. கூ. 23ஏ கிளையை ப. நோ. கூ. சங்க 23ம் கிளையுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது

யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கக் நிர்வாகிகள் 23 ஏ கிளையிலுள்ள தளபாடங்களை வெளியில் எடுத்து கிளையை மூட முயற்சித்தபோது பாவனையாளர் அதனை ஆட்சேபித்து மறியல் செய்தனர்.

பாஷையூர் ப. நோ. கூ. சங்க கிளைத்தலைவர் திரு. ஏ. செபஸ்தியாம்பிள்ளை, கிளையை மூடவேண்டாமெனக் கூட்டுறவு அமைச்சருக்குத் தந்தி அனுப்பியுள்ளார். பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூக நிலையத்தாரும், இது பற்றி கூட்டுறவு அமைச்சருக்கு புகார் செய்துள்ளனர்.

23ம் கிளையில் 1400 கூப்பன்களும், 23 ஏ கிளையில் 700 கூப்பன்களும் இருப்பதாகவும் அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டதுடன் இந்த நடவடிக்கையால் பாஷையூரில் சுமார் 4000 பாவனையாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் தந்தியில் கூறப்பட்டுள்ளது. [ச-அ]

---

## குளத்தில் மூழ்கி வாலிபர் மரணம்! கம்பர்மலையில் சம்பவம்

(நெல்லியடி)
வாலிபர் ஒருவர் குளத்திற்கு குளிக்கச்சென்ற சமயம் நீரில் மூழ்கி மரணமானர்.

வல்வெட்டித்துறை கம்பர் மலையைச் சேர்ந்த தம்பித்துரை சந்திரலிங்கம் [19வயது] என்னும் வாலிபரே மேற்படி மரணமானவராவர். இவர் தனது சகோதரனை தவராஜவுடன் விராச்சிக்குளத்திற்கு குளிக்கச்சென்ற சமயமே இந்த அசம்ப விதம் நிகழ்ந்தது. இவரது மரணவிசாரணையை வ மராட்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் நடத்தினர். வல்வெட்டித்துறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த விஜயசிங்க சாட்சிகளை ஆஜர் செய்தார்

இறந்தவரின் தாயார் த. சிவக்கொழுந்து, அவருடன் கூடச்சென்ற சகோதரன் தவராஜா, சண்முகலிங்கம் மகாதேவா. பொலிஸ்சார்ஜண்ட் வேலாயுதபிள்ளை ஆகியோரின் சாட்சியங்களைப் பதிவுசெய்துகொண்ட மரணவிசாரணை அதிகாரி நீரில்மூழ்கியதால் ஏற்பட்ட விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். (உ)

---

## பதுக்கல் முறியடிப்பு நடவடிக்கை

[புலோலி]
பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளில் திரு. வேல்முருகு தலைமையிலான விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் கோஷ்டி திடீர்சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனால் இப்பகுதிகளில் பதுக்கல், கொள்ளைலாபமடித்தல் போன்ற நடவடிக்கைகள் குறைந்துவருவதுடன் தாம்பெரிதும் நன்மையடைந்துவருவதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். [உ]

---

## விஸ்வமடுவுக்கு புது நூலகம்

(விஸ்வமடு)
விசுவமடு இளைஞர் குடியேற்றத்திட்ட இளைஞர்களின் நன்மைகருதி சகல வசதிகளையும்கொண்ட நூல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது

இக்குடியேற்றத் திட்டத்தில் விவசாயம் செய்யும் இளைஞர்களுக்கு அதிக நன்மை பயக்கக்கூடியதான இந்நூல் நிலையம் அமைப்பதற்கென 10,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

7,000 ரூபாவுக்கான வேலைகள் முடிவுற்றதாகவும், மிகுதி வேலைகளை முடிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(புலோ-உ)

---

## புதிய பஸ் சேவை

[புலோலி]
கிளிநொச்சி இ. போ. ச டிப்போவினர் கண்டாவளையிலிருந்து நெல்லியடிவரை புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இந்த பஸ் சேவையால் இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் மிக நன்மையடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

அத்துடன் இந்த பஸ் சேவையை பருத்தித்துறை வரை நீடிக்குமாறு இங்குள்ள விவசாயிகள் உட்படப் பல பிரயாணிகள் கிளிநொச்சி இ. போ. ச. சுப்பிரிண்டெண்ட் திரு. வி ஸ்ரீஸ்கந்தராசவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். [உ]

---

## மதகு இடிந்ததில் இரு தொழிலாளர் காயம்

(நெல்லியடி)
காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள மதகு ஒன்று இடிந்து விழுந்ததன் காரணமாக இரண்டு இளம் தொழிலாளிகள் பலத்த காயங்களுக்கு இலக்காகி ஆஸ்பத்திரிக்கு விரையப்பட்டனர்.

மேற்படி சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற பொழுது அவ்விரு தொழிலாளிகளும் தெருவோரத்தில் மண்வெட்டிக்கொண்டு நின்றார்கள் எனக் கூறப்படுகின்றது.

சம்பவத்தை அறிந்த பொலிசார் உட்பட பொதுமக்களும் ராணுவ வீரர் சிலரும் இடிபாடுகளுக்கு இடையில் சிக்குண்ட இரண்டு தொழிலாளிகளையும் மீட்கும் பணியில் ஈடுபட்டார்கள்

சிறிகாந்த் என்பவர் தலையில் பலத்த காயத்துடன் முதலில் மீட்டெடுக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார் மற்றத் தொழிலாளியை மீட்டெடுப்பதில் பெரும் பிரயத்தனம் எடுக்க வேண்டியேற்பட்டது இரண்டாவது நபரும் மீட்டெடுக்கப்பட்டதும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் அம்புலன்ஸ் வண்டி மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் அவர் செல்லப்பட்டார்.

---

## வலிகாமம்வடக்கு விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் 3-வது வருடாந்தவிளையாட்டு விழா ஏற்பாடுகள்பற்றி ஆராயும் பொருட்டு ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது இவ்வாலோசனைக் கூட்டம் எதிர்வரும் 3ம் திகதி பிற்பகல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

விளையாட்டுச் சங்கச் செயலாளர் திரு. ஏ முருகையா இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளார். (உ)

---

## எஞ்சியதொகை ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)
ஆவரங்கால் மாநாட்டுக்கென தமிழர் விடுதலைக் கூட்டணி வரவேற்புகுழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பணத்தில் செலவுகள் போக எஞ்சிய தொகை தமிழர் விடுதலைக்கூட்டணி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

செலவுகள் போக எஞ்சிய தொகையான ரூ 7720-49 சதம் நேற்று முன்தினம் வரவேற்புக்குழு தலைவரினல் கூட்டணிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

---

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]
தம்பலகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிய திரு எஸ். சோமாஸ்கந்தர் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குத்தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றுகிருர் [கே]

---

## மாணவர் நலன் கருதி...

[புலோலி]
பருத்தித்துறை லயன்ஸ்கழகம் இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் உயர்வகுப்பு மாணவரின், நன்மைகருதி, பாடசாலைகளில் பல அறிவுத்துறை விவாதங்களை நடாத்தி வருகிறது

இத கிணங்க சென்ற வாரம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் பருத்தித்துறை லயன்ஸ் கழகச் செயலாளர் திரு நடனசபாபதி தலைமையில் பொதுவுடமையா? தனியுடைமையா? என்ற விவாதமொன்று நடைபெற்றது. [வ]

---

## செட்டிகுளத்துக்கு பொது நூல்நிலையம்

[செட்டிகுளம்]
செட்டிகுளம் கிராமசபை எல்லைக்குள் உள்ள பாவற்குளத்தில் 18 000 ரூபா செலவில் பொது நூல்நிலையம் ஒன்று கட்டப்பட்டுவருகிறது

இதுவரை காலமும் இப்பகுதியிலுள்ள மக்கள் நூல் நிலையமொன்றில்லாமல் பெரும் கஷ்டப்பட்டமையினல் செட்டிகுளம் கிராமசபை இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கிணங்கவே இந்நூல்நிலையம் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

[புலோலி-உ]

---

## விபத்தில் ஆசிரியர் காயம்

(நெல்லியடி)
பட்டதாரி ஆசிரியரான இ. செல்வநாதன் என்பவர் மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளானர். தலையில் பலத்த காயத்துடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இவர் சிகிச்சைபெற்று வருகின்ருர்.

இவர் மோட்டார் சைக்கிளை செலுத்தி வருகையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ரேட்டில் விபத்து நடைபெற்றது. (உ)

---

## ஆனைக்கோட்டை வெற்றி

[யாழ்ப்பாணம்]
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் கழகம் யாழ்ப்பாணம் வைக்கிங்ஸ் கழகத்தை 4—0 கோல்களால் வெற்றிபெற்றது

### இன்றைய ஆட்டம்

இன்றைய ஆட்டத்தில் குருநகர் 'பாடும் மீன்' 'பி' பிரிவுக் கோஷ்டியும். பாஷையூர் சென் அன்ரனிஸ் 'பி' பிரிவுக் கோஷ்டியும் மோதும். [இ]

---

## கட்டுவன் சாம்பியன்

(பலாலி)
"குட்பிளான் விநாயகர் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரு பிரிவுகளிலும் கட்டுவன் சாம்பியன் ஆனது.

3 ம் பிரிவு சாம்பியன் போட்டியில் கட்டுவன் மத்தி விஸ்வநாதப் புலவர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் குட்பிளான் விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதியது. போட்டி தொடங்கி முடியும் வரை விறுவிறுப்பாக இருந்தது பின்னர் இறுதியில் கட்டுவன் மத்தி விஸ்வநாதப் புலவர் விளையாட்டுக் கழகம் 1—0 கோலால் சாம்பியனானது.

2 ம் பிரிவு சாம்பியன் போட்டியில் கட்டுவன் தென்மயிலை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் மோதியது 5—2 கோல்களால் கட்டுவன் தென்மயிலை விளையாட்டுக்கழகம் சாம்பியனானது (ச)

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# தமிழ்ப்பண்டிதர்கள் சம்பள அநீதியை நீக்குக

சிங்களத்தையும் தமிழையும் தேசிய மொழிகளாகப் புதிய சட்டத்தின் மூலம் யு. என். பி அரசாங்கம் தற்போது பிரகடனம் செய்திருக்கின்றது. முன்னைய அரசகளால் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்குத் தாம் நீதிவழங்கப்போவதாக வலியுறுத்தி வருகிறது.

1967ம் ஆண்டில் பதவியில் இருந்த அரசாங்கம் 1968ம் ஆண்டு தைமாதம் முதலாக சிங்களப் பண்டித ஆசிரியர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளத்தை அளித்திருக்கிறது. தமிழ்ப் பண்டிதர்களை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்திற்குச் சமானம் உடையவர்களாக மந்திரிசபையில் தீர்மானம் ஒன்று கொண்டுவந்து நிறைவேற்றியதுடன் கைவிட்டுவிட்டது அவர்களுக்கு இன்றுவரை பட்டதாரிகளின் சம்பளவிகிதம் வழங்கப்படவில்லை.

26-12-1958ம் திகதி அப்போதைய கல்வி அமைச்சர் அப்போதைய எம். பி. திரு. வி. ஏ. கந்தையாவுக்கு எழுதிய கடிதத்தில் சிங்களப் பண்டிதர்கள்பெறும் உரிமைகளைத் தமிழ்ப்பண்டிதர்களுக்கும் வழங்குமாறு தாம் மந்திரிசபைக்குச் சிபார்சு செய்துள்ளதாக அறிவித்திருக்கிறார். மந்திரி சபையும் அதனை ஏற்றுக்கொண்டு 28-1-1959ம் திகதி தீர்மானம் நிறைவேற்றியதாகத் தெரியவருகிறது.

1958ம் ஆண்டிற்கு முன்பிருந்தே சிங்களப் பண்டிதர்களும தமிழ்ப்பண்டிதர்களும் பட்டதாரிகளின் சம்பளத்தைக் கேட்டுப் போராடி வந்திருக்கிறார்கள். இருந்தும் சுமார் 10 வருடங்களின் பிறகு சிங்களப் பண்டிதர்களுக்கு மட்டும் பட்டதாரிகளின் சம்பளத்தை அளித்துவிட்டு தமிழ்ப் பண்டிதர்களைப் புறக்கணித்திருப்பது அநீதியானது.

இந்த அநீதியைக் களைந்து பண்டிதர், வித்துவான், புலவர் யாவர்க்கும் நல்லன செய்யுமாறு கௌரவ கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறோம்.

வித்துவான்
எம். ஏ. ரஹ்மான்
அல்-அஸ்ஹர், ம. வி.
மன்னார்.

# விளம்பரம்கூட இறக்குமதியா?

அரசாங்கம் இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி விருப்பதினால் பல வெளிநாட்டுப் பொருள்கள் எமது நாட்டில் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன.

இது விளம்பர யுகம், விளம்பரம் இல்லாமல் சிறந்த பொருள்களைக்கூட விற்பனை செய்ய முடியாதநிலை.

பொருட்களைத்தான் இறக்குமதிசெய்கிறீர்கள். அவற்றுக்கான விளம்பரத்தையுமா இறக்குமதிசெய்யவேண்டும்? சில விளம்பரங்கள் இப்போது இந்தியாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன. எமது நாட்டில் இதனை விளம்பரம் செய்ய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குக் குரல் வளம் இல்லையா?

இலங்கைக்கு விஜயம்செய்த திரைப்பட இயக்குனர் கே. பாலசந்தர், நடிகர் திலகம் ஆகியோர் நமது வானொலிக் கலைஞர்களைப் பாராட்டிச் சென்றிருக்கின்றனர் இதனை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

விளம்பரம் ஒரு கலை. எமது நாட்டு இலக்கியங்கள் இந்தியாவினுள் நுழையாதபட்சத்தில் அவர்களுடைய இலக்கியப்படைப்புக்கள் எமக்கு ஏன்? என்று கேட்கும் இக்காலகட்டத்தில் இந்த விளம்பர இறக்குமதி ஏன்?

இறக்குமதியாளர்கள் இதனைச் சிந்தித்துச் செயல்பட்டால் இதனால் வீழ்ச்சிடையப் போகும் நமது கலைஞர்களை ஊக்குவிப்பதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

திருவாதிரையன்
யாழ்ப்பாணம்-

# கடிதமூலம் மீண்டும் கோருவர்

(யாழ்ப்பாணம்)

தமிழுக்கு முதலிடம்கொடுக்காத வர்த்தகர்களின் முகவரிகள் திருக்குறள் முன்னணிக் கழகத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. வர்த்தக நிலையங்களுக்கு தமிழுக்கு முதலிடம் அளிக்கும்படி இரண்டாவது தடவையாக கடிதமூலம் வேண்டுகோள் விடப்படுமெனவும், அதற்கும் பொருட்படுத்தாது விடின், எதிர்வரும் தைமாதம் நடைபெறவிருக்கும் கலைவிழா ஒன்றில் அவர்களுக்கு எதிராகச்சில நடவடிக்கைகள் கொண்டுவரப்படும் எனவும் திரு. வண்ணை ஆனந்தன் தெரிவித்தார்.

அவற்றில் சில நடவடிக்கைகளாக தமிழுக்கு முதலிடம் கொடுத்த வர்த்தக நிலையங்களை விளம்பரப்படுத்துவது. கடிதமூலம் அறிவித்தும் செயற்படுத்தாத வர்த்தகநிலையங்களை பகிரங்கமாக தெரியப்படுத்துவது, அந்நிலையங்களில் பொருட்களை வாங்கச் செல்பவர்களைத் தடைசெய்வது என்பனவும் அடங்குமென அவர் மேலும் குறிப்பிட்டார். (கே-உ)

# புயல் நிவாரணம்

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவகையில் பயங்கர சூறாவளி, வெள்ளம் ஏற்பட்டு நாட்டையே உலுக்கியுள்ளது.

பலர் உயிரிழந்துள்ளதுடன் கோடிக்கணக்கான ரூபா உடைமைச்சேதமும் இதனால் விளைந்துள்ளது.

இந்த நெருக்கடிமிக்க நேரத்தில் நாட்டு மக்கள் இன, மத மொழி வேறுபாடின்றி மனிதாபிமானத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டும்.

அரசாங்க சேவையில் உள்ளவர்கள் மட்டும்தான் உதவவேண்டும் என்பதில்லை. சனசமூக நிலையங்கள் கிராம முன்னேற்றச் சங்கங்கள் என்பனவும் இந்நிவாரணப் பணிகளில் ஈடுபடவேண்டும், இந்தவகையில் வடபகுதியில் உள்ள சனசமூகநிலைய, கிராமமுன்னேற்றச்சங்க அங்கத்தவர்கள் வாகனங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து தமது ஒத்துழைப்பையும் அளிக்கவேண்டும்.

நமது சகோதரர்களுக்கு இந்த நேரத்தில் நாம் விரைந்தோடி உதவாவிட்டால் வேதனை நேரம் கைகொடுப்போம் என்பதில் அர்த்தமே இல்லாதுபோய்விடும்.

கே. ஜெகதீசன்
(சந்திரன்)
யாழ்ப்பாணம்.

## ஆசியக் கருத்தரங்கில்

# ஈழத்தமிழர் அறப்போராட்ட வரலாறு சமர்ப்பிக்கப்படும்

மனித உரிமைகள் மறுக்கப்படும்பொழுது அறப்போர் மூலம் அநீதி தலையெடுக்காது பாதுகாப்பதுபற்றிக் காந்தி வழிக் கருத்தரங்கு இந்தியாவில் குஜராத் மாநிலத்திற் தொடங்குகின்றது. இக்கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலும் தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு சார்பிலும் கலந்து கொள்ள திரு. க. சச்சிதானந்தன் கடந்த திங்கட்கிழமை இந்தியா பயணமானார்; காந்தி சமாதான நிறுவனத்தினால் நடாத்தப்படும் இக்கருத்தரங்கு 15 நாட்களுக்கு நீடிக்கும். குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத்நகரில் 5 நாட்களும் காந்தி ஆசிரமங்களில் 5 நாட்களும் பின் மகாராஷ்டிர மாநிலத்தில் வார்தா நகரில் உள்ள சேவா கிராமத்தில் 5 நாட்களும் இக்கருத்தரங்கு நடைபெறும்.

உலக நவநிர்மாண சமிதி, கன்னியா ஆசிரமம், யந்திர வித்தியாலயம், வனுத்திட்டம், ஆனந்தநிகேதன் ஆசிரமம், பரோடா கலைக்கட்டடம், ஆமதாபாத், குஜராத் வித்தியாலயதீபம், சபர்மதி ஹரிஜன் ஆசிரமம், லோக் பாரதி கிராமிய முன்னேற்றத் திட்டம், ராஜ்கோட், சாதி கிராம்யோக உற்பத்தி நிலையம், சௌராஷ்டிர ரச்ஷ நட்மாச்சமிதி ஆகிய நிறுவனங்களையும் திரு. சச்சிதானந்தன் பார்வையிடுவார்.

மெக்சிக்கோவில் கடந்த ஆண்டு நடைபெற்ற மகாநாட்டின் தொடர்ச்சியாக நடத்தப்படும் இம்மகாநாட்டில் சிங்கள இளைஞர்களும் பங்குபற்றுகிறார்களென்பது குறிப்பிடத்தக்கது.

அறவழி நின்று கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தந்தை செல்வா தலைமை தாங்கி நடாத்திய போராட்டங்கள் பற்றிய தொகுப்புக் கட்டுரை ஒன்றைக் கருத்தரங்கில் திரு. சச்சிதானந்தன் சமர்ப்பிப்பார். மேலும் ஈழத்தமிழர்களின் அறவழிப் போராட்டவரலாற்றினடிப்படையான தமிழின விடுதலை பற்றியும் தமிழ் மக்களின் உரிமைகள் அடிபபடைமனித உரிமைகள் மறுக்கப்பட்டமை பற்றியும் விளக்குவதோடு, ஏனைய நாட்டு அறப்போராட்டத் திட்டங்கள் பற்றியும் அறிந்து வருவார். சிறப்பாக மேலைநாட்டு அறப்போராட்டக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவது பற்றியும் இக்கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படுமாம். [அ]

# ஸ்பெயின் கப்பல் விபத்து: இணுவில் வாலிபரும் பலி

(யாழ்ப்பாணம்)

ஸ்பெயினில் நடைபெற்ற பயங்கர சப்பல் விபத்து ஒன்றில் யாழ்ப்பாண வாலிபர்கள் சிலர் பலியாகியுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த சிவகுரு சிறீகாந்தரூபன் என்பவரும், இணுவிலைச் சேர்ந்த பி. செகராஜசிங்கம் என்பவருமே இவ்விருவருமாவர்.

அச்சுவேலியைச் சேர்ந்தவரது உறவினர் தகவலைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இணுவிலைச் சேர்ந்த செகராஜசிங்கம் என்பவரது மரணம் பற்றிய தகவலை உரியவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிகிறது.

இவரது பாஸ்போர்ட் இலக்கம் E 178798 என்றும் 17- மார்ச் 1953ல் இவர் பிறந்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது.

''ஜன்சோலோ'' என்ற ஸ்பெயின் கப்பல் வெடித்து சிதறியதால் மரணங்கள் சம்

(6-ம் பக்கம் பார்க்க)

நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நானே நமதே

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
ஒரு தாய்மக்கள்

தினசரி 4 காட்சிகள்
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி எஸ். எஸ். ஆர்- வீரப்பா
குமாரி கமலா- டி. கே. பகவதி-ராஜம்
[யாழ். நகர்] நடித்த
சிவகெங்கைச் சீமை (புதியபிரதி)

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வந்தாளே மகராசி
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ போன்: 7698 தினசரி 4காட்சிகள்
]யாழ்.நகர்[ எங்கள் தங்க ராஜா

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ்நகர்] முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) சிவாஜி - ஜெமினி - சாவித்திரி நடித்த
பந்த பாசம் (புதிய பிரதி)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் போன்: 466
[யாழ்ப்பாணம்] 6-வது வெற்றி வாரம்
ஓ சிவராம் ஓ சந்திரகலா ஓ தனரத்தினம் நடித்த
அநுராகம்

சபாஷ்! சபாஷ்!! சபாஷ்!!!
ஹவுஸ் புல்! ஹவுஸ்புல்!! ஹவுஸ்புல்!!!
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு நடித்த (இரு வேடங்களில்)
சபாஷ் மீனா (புத்தம் புதிய பிரதி)

REGAL
(Jaffna) NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m,
"Dr. Terror and the House of Horror's"
(Color — Adults Only)
விநாடிக்கு விநாடி உங்கள் இரத்தத்தை உறையவைக்கும் காட்சிகள் நிறைந்த பயங்கரப் படம்.
Next Atraction
Full action Film SPECIALIST

HOUSE FULL! HOUSE FULL!! HOUSE FULL!!!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30
தினசரி 5 காட்சிகள் அநேகஇரசிகர்கள் டிக்கட்இன்றி ஏமாற்றமடைகின்றனர்.
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)
'பிளட்மணி' அதிசிறந்த கராட்டிச்சித்திரம்

Rio (Jaffna)
2nd crowded week
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)

# சிக்கன மின்விநியோகம் மேலும் நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின்நிலையத்தில் உள்ள சுமார் 50 அடி உயர மான இயந்திரங்களைக் குளி ரூட்டும் பகுதி அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால்விழு ந்துசேதமாகியுள்ளது. இதனால் சுமார் ஒரு லட்சம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாம்.

இதேவேளையில் 5 பாரிய இயந்திரங்களிலிருந்து பெறப் படும் மின்சாரம் தற்போது கட்டுப்படுத்தப்பட்ட அள வில் வடபிரதேசத்தில் வழங் கப்பட்டு வருகிறது. இந்த நிலை அநேகமாக மேலும் ஒரு வாரம் நீடிக்கலாம் எனக் எதிர்பார்க்கப்படுகிறது.

மின்நிலயத்தில் பழுதடைந் திருக்கும் மற்றும் 2 இயந் திரங்களையும் திருத்தி அதிக மின்சாரத்தை வழங்கும் பணியில் சபை ஊழியர்கள் தற்போது ஈடுபட்டுவருகின்ற னர். விரைவில் இவ்வியந் திரங்களும் இயங்கும் என்று தெரிகிறது.

அனுராதபுரத்துக்கப் பால் நீர் மின்சார விநியோகத்தில் தடைகாரணமாகவே வட பகுதியில் நீர் மின்சார சபை அதிகாரி ஒருவர் கூறினார். (இ)

## கிழக்கிலங்கைக்கு யாழ்வளாகத்தினர் மருத்துவ உதவி

(யாழ்ப்பாணம்)

இயற்கையின் சீற்றத்தால் துயருற்றிருக்கும் கிழக்கில ங்கை மக்களின் துயரைத் துடைக்கும் பணியில் யாழ் வளாக மாணவர்களும், விரி வுரையாளர் சங்கமும் பெரு முயற்சி செய்துவருகின்றனர்.

யாழ். வளாக மாணவர்கள் உணவு, உடை என்பவற்றை யும் பெருமளவிற் சேர்த்து, புதன்கிழமை அதிகாலை லொறி கள், பஸ்கள் மூலம் மட்டக் களப்பை நோக்கிப் புறப்பட் டனர். மேலும் பொதுமக்க ளிடமும், வளாக மாணவரி டமும் சேர்த்த பண வுதவி யினால் பெருமளவு மருந்து வகைகளையும் அவர்கள் தம் முடன் கொண்டுசென்றனர். யாழ். வளாக மருத்துவபீடத் தைச் சேர்ந்த டாக்டர் பர மேஸ்வர ஐயர் அம்பிகாபதி யும், டாக்டர் மதி. சந்திர குமாரும் இம்மருந்துகளுடன் சென்று மக்களுக்கு வேண் டிய மருத்துவச் சிகிச்சைகள் செய்ய இக்குழுவுடன் சென் றுள்ளனர்.

யாழ். வளாக ஆசிரியர் சங்கத்தினரும் பெருமளவு நிதி திரட்ட ஆரம்பித்துள்ள னர். யாழ் வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந் தனும், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், கலாநிதி அ. சண்முகதாசும் யாழ் வளாக ஆசிரிய மாணவ மருத்துவச் சிகிச்சைக் குழுவை அனுப்பிவைக்கப் பெருமுயற்சி எடுத்தனர். (அ)

### ஒரு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்திலும், ஏனைய பகுதிகளிலும் ஏற் பட்ட சூறாவளியால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக நிதியுதவிசெய்து உதவும்படி இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தி யோகத்தர் சங்கம் தனது அங்கத்தவர்களை வேண்டியுள ளது. இலங்கைத் தபால்தந் திப் பகுதியின் மொழிவழிச் சங்கங்களுள் ஒன்றாகிய இச் சங்கத்தின் யாழ். கிளைப் பிர முகர் இத்தகவலை வெளியிட் டார். (அ)

## தொண்டர் குழு நியமனம் வட்டு. எம்.பி. ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென வட்டுக் கோட்டைத் தொகுதியின் எம். பி. திரு. தா. திருநா வுக்கரசு, அங்கீகாரம்பெற்ற ஒரு தொண்டர் குழுவை அமைத்துள்ளார்.

நிதி, துணிவகை, உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை வழங்குபவர்கள் இம் மாதம் தொண்டர் பட்டியலுடன்வரு பவர்களிடம் கொடுத்து அதற் கான பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

இதன் முன்னேற்பாடாக 1250 ரூபாவைக் குழுவிடம் கொடுத்து நிதியை ஆரம் பித்துவைத்தார்.

வட்டுக் கோட்டைத் தொகுதியிலுள்ள கூட்டணிக் கிளைகள், பாடசாலைகள் மற் றும் ஸ்தாபனங்கள், வீடுகள் தோறும் சென்று நிவாரண உதவி பெறுவதற்கென தொகுதி கமத்தொழில் உத்தி யோகத்தர்களின் உதவியை யும் எம். பி. கேட்டுள்ளார். இதற்கான முயற்சிகளில் எம். பி. யின் செயலாளர் திரு. நாகபத்மநாதன் ஈடு பட்டுள்ளார்.

நிதி உதவிக்கென உறுதிப் படுத்தப்பட்ட இலச்சினை கொண்ட பட்டியல்கள் தயா ரித்து அங்கீகாரம்பெற்ற தொண்டர்களிடம் வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார். (ஈ)

### ஸ்பெயின்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பவித்துள்ளதாக கொழும்பில் உள்ள கப்பல் தொடர்பு சட் டத்தரணி திரு. கே. பூபால சிங்கத்திற்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

கே. பூபாலசிங்கம், சட்டத் தரணி, ஹெல்ஸ்டெப், கொழு ம்பு என்பது இவரது முகவரி யாகும். (உ)

### இன்று

(யாழ்ப்பாணம்)

கவிமணி வி. கந்தவனத்தால் எழுதப் பெற்ற இலங்கையில் ஆசிரியத்தொழில் என்னும் நூல் இன்று பிற்பகல் வெளி யிட்டு வைக்கப்படும். இந் நூல் வெளியீட்டு விழா வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரிய கழகத் தால் அங்கு நடைபெறுகின் றது.

தலைவர் திரு. எம். கணே ஷன் தலைமைவகிப்பார். வித் தியாலய அதிபர் திரு. ஆ. இராசையா முதற் பிரதி வாங்கி நூலை வெளியிட்டு வைக்கவிருக்கிறார். [உ]

### கூட்டணி நிதி சேகரிப்பு

(நல்லூர்)

நல்லூர்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பத் துக் கிளைகளும் இன்றுமுதல் பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களுக்காக நிதி திரட்டு வதான பணிகளைக் கவனிப் பதற்கு பின்வருவோர் மத் திய குழுவினால் தெரிவுசெய் யப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி ஆர். விக்னே நாதன், சட்டத்தரணி எஸ். நாகராசா, திரு. கனகசபாபதி திரு. எஸ். துரைராஜசிங்கம், திரு. எஸ். தவராசா, திரு வண்ணை ஆனந்தன். (கெ)

### ரூ. 2லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சனசமூக நிலையங்களுக் காக இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாண தொகுதியில் அமைந்திருக்கும் பதினேழு சனசமூக நிலையங்களுக்காக யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனின் முயற்சி யின் பேரிலேயே இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது (மா)

### சூறாவளி நிதி ஆலோசனைக் கூட்டம்

[சாவகச்சேரி]

கிழக்கு மகாணத்தில் ஏற் பட்ட சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமுகமாக நேற்று சாவகச்சேரித்தொகுதி வர்த்தக உள்ளூராட்சி பொது தாபன பிரமுகர்களால் நடாத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய நாளை சனிக்கிழமை பிற்பகல் நுணு வில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள சாவகச்சேரி மக்களது சூறாவளி வெள்ள நிவாரண புனருத்தாரண நிதி அமைப்பு ஆலோசனைக் கூட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு சாவகச் சேரி எம். பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இன்று யாழ். நகரில் தமிழ்க்கலைஞர்கள் நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இயற்கையின் கோரத்தாக் குதலுக்கு இலக்காகி அல்ல லுறும் கிழக்கிலங்கை மக்க ளுக்கு நிதிசேகரித்து உதவ கலைஞர்களும் முன்வந்துள்ள னர்.

அகில இலங்கை தமிழ் நாடகக் கலைஞர் பேரவையின் ஆதரவில் ஈழத்தின் பிரபல திரைப்பட, நாடக, நடனக் கலைஞர்கள் பலரும் இன்று பிற்பகல் யாழ் நகரில் உண் டியல் ஏந்தி நிதிசேகரிப் பார்கள்.

இக் கலைஞர் பேரவையின் தொண்டர்கள் பலர் ஏற் கனவே மட்டக்களப்பு சென் றுள்ளனர்.

### கலை விருந்து

கிழக்கிலங்கை புயல் நிவா ரண நிதிக்காக, அகில இலங் கைத் தமிழ் நாடகக் கலை ஞர் பேரவை கலைவிருந் தொன்றை அளிக்க ஏற்பாடு செய்துள்ளது யாழ் வீரசிங் கம் மண்டபத்தில் இம்மாதம் எட்டாந் திகதி மாலை நடை பெறும், இக்கலை விருந்தில் பிரபல கலைஞர்கள் கலந்து கொள்வார்கள்.

### சமய பாடசாலை கதம்பவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சிவானந்த சிறுவர் சமயப் பாடசாலையின் கதம்பவிழா நாளை மாலை நல்லூர் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

### மகளிர் பேரவை நிதி சேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

மகளிர் பேரவையினர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருமதி யோகேஸ்வரன் ஆகியவர்க ளின் தலைமையில் சூறாவளி நிதி சேகரிப்பில் நேற்றும் ஈடுபட்டனர்.

### எட்டு...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

திரு. ஆர். பிரேமதாச நேற்று மண்டலம் பாராளுமன்றத் தில் அறிவித்தார்.

சுமார் 500 பேர் மரண மடைந்திருப்பதாக அறிவிக் கப்பட்டுள்ள போதும் போக்கு வரத்து தொலைத்தொடர்பிலி ருந்து தொலைத்தொடர்பிலி ருந்து முற்றாகத் துண்டிக்கப்பட் டுள்ள கிராமங்களின் நிலைப இல்லையும் அறிவிக்கப்பட வில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, பொலனறுவை ஆகிய மாவட் டங்கள் மோசமான பாதிப் புக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவித்த பிரதமர், மாத்தளை அம்பாந்தோட்டை மாவட்ட ங்களின் சில பகுதிகளும் பாதி ப்புகளுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட இடங்களில் கஷ்டமுறும் மக்களுக்கு உணவு உடை, மருந்து வகைகள் மிக அத்தியாவசியமாக இருப் பதாகவும் பிரதமர் தெரிவித் தார். [ம-இ]

### புதிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி

களை பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணி, நெதர்லாந்து மகாராணி, சைப்பிரஸ் ஜனாதிபதி, மொங்கோலியா ஜனாதிபதி ஆகியோர் நேற்று அனுப்பிவைத்தனர்.

அமெரிக்க இராணுவக் குழு

அமெரிக்க இராணுவ ஆய் வுக் குழுவொன்று நேற்று கொழும்பு வந்துசேர்ந்தது பலதுறைகளையும் சேர்ந்த 2 நிபுணர்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இதற்கிடையே நோர்வே, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் மிகக் கூடுதலான நிதி மற் றும் உதவிகளை இலங்கைக்கு தாராளமாக அனுப்பி வைத் துள்ளன.

### மட்டக்களப்பு...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பீடம், வடபகுதி மக்களைக் கேட்டுள்ளது

மட்டக்களப்பில் உணவு நிலைமை சீரடைந்துள்ளது. போக்குவரத்துச்சேவை சீராக நடைபெறுகின்றது. மட்டக் களப்பு, ஆரையம்பதி, காத் தான்குடி, கிரான், முறக்கொட் டாஞ்சேனை, விச்சுக்கலமுனை, களுவாஞ்சிக்குடி, சாய்ந் தமருது ஆகிய பகுதிகளில் முற் றாகவோ அல்லது பகுதியா கவோ சேதமடைந்த வீடுகளைச் செப்பனிடுவதில் தொண்டர் கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

### டாக்டர்கள் பற்றாக்குறை

கிழக்கிலங்கையில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வைத்திய உதவி அளிப்பதில் டாக்டர் கள் தாதிகள் பற்றாக்குறை நிலவுகிறது.

உயாளசிநிலையுள்ள சகல தனியார்துறை டாக்டர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேவையாற்றுமாறு பொது ஸ்தாபனங்கள் தனியார் டாக்டர்களுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளது.

தமிழ் இளைஞர் பேரவை, யாழ் வளாக தமிழ்மன்றம், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றினால் கிழக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்ட சகல உதவிகளும் கிடைத்துள்ளன. எந்தவாகனமும் தடுத்து கொள்ளையடிக்கப்படவில்லை. தற்போது நிலைமை சமுகமாக வுள்ளது.

### தொற்று நீக்கிகள்

பாதிக்கப்பட்ட மக்களை தொற்றுநோய் தாக்கும் அபா யம் தலைதூக்கியுள்ளதால், லயன்ஸ் கழகம், ரோட்டரிக் கழகம் மற்றும் பொதுநிறுவ னங்கள் தொற்றுநோய்தடுப்பு மருந்து வகைகளை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுத் துள்ளது. [கெ]

### மரண அறிவித்தல்

#### சுல்தான் நாச்சியா

43, ஆஸாத் வீதி, யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த சுல்தான் நாச்சியா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சங்கானை வியாபாரி M. M. அபூபக்கர் (முத்தராசா) அவர்களின் மனைவியாவார். இவர் சபியா, ராமிலா ஆகியோரின் தாயும், சங்கானை அங்கீகரிக்கப்பட்ட ங்கிட்டு விற்பனையாளர் ஜனாப் M. A. அஸீஸ், யாழ்ப்பாணம் 'வெல்பிட்' ஸ்தாபன உரிமையா ளர் ஜனாப் M அக்பர் ஆகி யோரின் மாமியாருமாவார். அன்னாரது ஜனாஸா 1-12-78 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மேலுள்ள விலாசத் திலிருந்து சின்னப்பள்ளிவாசல் மையவாடிக்கு நல்லடக்கத் திற்காக எடுத்துச்செல்லப் படும் உறவினர்களும் நண் பர்களும் இவ்வறிவித்தலை ஏற் றுக்கொள்ளவும். 0944

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்தி லுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu. Telephone: 389, Registered as a Newspaper in Sri Lanka